செ.வெ.எண்:23/ஜூன் நாள்:12.06.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

# இராமேஸ்வரம், அக்னி தீர்த்த கடற்கரையில்

# குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் சுற்றுப்புறத்தை தூய்மைப்படுத்தும் பணிகள்

# மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், அக்னி தீர்த்த கடற்கரையில் இன்று (12.06.2016) தேசிய குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற மனித சங்கிலி நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பொதுமக்கள் மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகள் குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான விழிப்புணர்வு உறுதிமொழியினை எடுத்துக்கொண்டார்கள். அதன்பின்பு, உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விவேகானந்தா கேந்திரம் தொண்டு நிறுவனத்தின் சார்பாக சுற்றுப்புறத்தை தூய்மைப்படுத்தும் பணிகளை துவக்கி வைத்தார்.

குழந்தை தொழிலாளர் முறையினை முற்றிலுமாக அகற்றிட வேண்டும் என்ற விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையில் ஆண்டு தோறும் ஜீன் மாதம் 12-ஆம் நாள் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தேசிய குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமான இன்று இராமேஸ்வரம், அக்னி தீர்த்த கடற்கரையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் பொதுமக்கள், பள்ளி செல்லும் குழந்தைகள் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்ற குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு விழிப்புணர்வு மனித சங்கிலி நிகழ்ச்சி நடைபெற்றது. இம்மனித சங்கிலி நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவரும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான விழிப்புணர்வு உறுதிமொழியினை எடுத்துக்கொண்டார்கள்.

அதேபோல, சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரிப்பது உலக சுகாதாரத்திற்கு உறுதுணையாக விளங்கும் என்ற எண்ணத்தை பொதுமக்களிடையே ஏற்படுத்திடும் விதமாக ஆண்டுதோறும் ஜுன் மாதம் 5-ஆம் நாள் உலக சுற்றுச்சூழல் தினமாக (World Environment Day) கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதனை முன்னிட்டு, தமிழகம் மட்டுமல்லாது பிற மாநிலங்களில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை தரும் இடமாக விளங்கும் இராமேஸ்வரத்தில் உள்ள பகுதிகளை தூய்மையாக பராமரித்திட வேண்டும் என்ற எண்ணத்தை விவேகானந்தா கேந்திரா தொண்டு நிறுவனத்தின் சார்பாக இராமேஸ்வரம் அக்னி தீர்த்த கடற்கரையில் சுற்றுப்புறத்தை தூய்மைப்படுத்தும் பணிகளை துவக்கி வைத்தார். தூய்மைப்படுத்தும் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு இராமேஸ்வரத்தினை சுற்றுப்புற தூய்மையில் தன்னிறைவு பெற்ற சுற்றுலாத் தளமாக ஏற்படுத்திடும் வகையில் பணியாற்றிட வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், இராமேஸ்வரம் நகர்மன்றத் தலைவர் திரு.அர்ச்சுனன், மாவட்ட தொழிலாளர் ஆய்வாளர் திரு.ஜெ.காளிதாஸ், விவேகானந்தா கேந்திரா தொண்டு நிறுவன ஒருங்கிணைப்பாளர் திருமதி.சரஸ்வதி உட்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**